[1984 பிப்ரவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி : ''ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்''

''1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவர்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 22-2-1984 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும்—ஆணைகளும்.

எதுவுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

16. வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை.

இணைப்பு

(328-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 107 (15203)க்கான விடையைக் காண்க.)

புற்றுநோய் உண்டாவதற்கான தகுந்த காரணங்கள் (Etiology) எதுவும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால் மனித உடலில் பலவித புற்றுநோய் பல உறுப்புகளில் தோன்றுகின்றன. புற்றுநோய் உற்பத்திக்கு கீழ்க்கண்ட காரணங்கள் கூறப்படுகின்றன :—

புகையிலை, சுண்ணாம்பு போடுதல், பயோரியா என்று சொல்லப்படும் ஈறு நோய், பீடி, சிகரெட் உபயோகித்தல், கள், சாராயம் குடித்தல், சாப்பாட்டில் அதிக காரம், வைட்டமின் சத்துக் குறைவு இவைகளால் வாய் புற்றுநோய் ஏற்படும்.

பிள்ளைகளுக்கு தாய்ப்பால் கொடுக்காதவர்களுக்கு மார்பகத்தில் புற்றுநோய் ஏற்படுகிறது. குழந்தைகள் அதிகம் பெறுபவர்களுக்கும், மிக இளம் வயதில் திருமணம் செய்பவர்களுக்கும் பிறப்பு உறுப்புகளை சுத்தமாக வைக்காதவர்களுக்கும் கருப்பையில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இரசாயனச் சேர்க்கை

1984 பிப்ரவரி 21]

யாலும் புற்றுநோய் ஏற்படுகிறது. கார்சிநோசென்ஸ் (Carcinogens) என்ற ஒரு வகை நச்சு புகையாலும் புற்றுநோய் ஏற்படுகிறது. கீழ்க்கண்ட அரசு தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கான சிகிச்சை வசதிகள் உள்ளன.

அரசு மருத்துவ மனைகள் :

1. அரசு பொது மருத்துமனை, சென்னை.
2. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
3. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
4. அரசு தாய்சேய் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை.
5. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம் மற்றும் புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரம்.
6. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை.

தனியார் மருத்துவ மனைகள் :

1. புற்றுநோய்க்கழகம், அடையாறு.
2. டாக்டர் ராய்ஸ் தனியார் புற்றுநோய் மருத்துவமனை.
3. டாக்டர் துரைசாமி புற்றுநோய் மருத்துவமனை.
4. வேலூர் மிஷன் மருத்துவமனை.
5. ஓட்டன் சத்திரம் புற்றுநோய் மருத்துவமனை, மதுரை.
6. இன்டர்நேஷனல் புற்றுநோய் மையம், நெய்யூர்.
7. டாக்டர் குப்புசாமி நாயுடு புற்றுநோய் மருத்துவமனை, கோவை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS